# ஜெம் மருத்துவமனையின் "கருத்தரிப்பு மருத்துவ துறை மற்றும் ஒருங்கிணைந்த மகளிர் மையத்தை" மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன் திறந்து வைத்தார்

***சென்னை, 28 ஆகஸ்ட் 2021:*** **சென்னை ஜெம் மருத்துவமனையில் *'கருத்தரிப்பு மருத்துவ துறை மற்றும் ஒருங்கிணைந்த மகளிர் மையத்தை'* மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன்** தொடங்கி வைத்தார். இது பெண்கள் மருத்துவக் குழு தலைமையிலான பெண்களுக்கான சிறப்பு மையமாகும். கௌரவ விருந்தினர் **பேராசிரியர் டாக்டர் பர்வீன் சுல்தானா** தனது உத்வேகமூட்டும் உரையால் கூட்டத்தை செம்மைப்படுத்தினார்.

**திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன்**, பெண்களுக்கான சிறப்பு பராமரிப்பு மையத்தைத் திறந்து, சிறந்த சுகாதார சேவைகளை வழங்கி வரும் ஜெம் மருத்துவர்களை வாழ்த்தினார். மேலும் அவர் பேசுகையில், ''பல பெண்கள் தங்கள் உடல்நலப் பிரச்சினைகளை மருத்துவர்களிடமும் தங்கள் நெருங்கிய மற்றும் அன்புக்குரியவர்களிடமும் எடுத்துச் செல்ல தயங்குகிறார்கள். பெண்கள் ஒவ்வொரு குடும்பத்தின் முதுகெலும்பாக உள்ளனர். 30 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு பெண்ணும் குறிப்பிட்ட கால இடைவெளியில் முழுமையான மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது மற்றும் ஏதேனும் உடல்நலப் பிரச்சினைகள் இருந்தால் மருத்துவரை அணுகுவது முக்கியம். இந்த முக்கியமான பிரச்சினையை தீர்க்க ஜெம் மருத்துவமனையின் முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது மற்றும் அவர்களால் சமூகத்தில் மாற்றத்தை கொண்டு வர முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்றார்.

இந்த நிகழ்ச்சியில், **ஜெம் மருத்துவமனைகளின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர்.சி.பழனிவேலு** பேசுகையில், "இன்சிஷனல் ஹெர்னியா, உடல் பருமன், கோலிசிஸ்டிடிஸ், சிறுநீரகம் மற்றும் சிறுநீர் பாதை நோய்த்தொற்று, பெல்விக் அல்சர், மார்பக புற்றுநோய், கர்ப்பவாய்ப் புற்றுநோய் போன்ற உடல்நலப் பிரச்சினைகள் பெண்களிடையே மிகவும் பொதுவானவை. பல பெண்கள் சமூகத்தின் மீதான பயத்தினால் அவர்களின் உடல்நலப் பிரச்சினைகளைப் பற்றி பேசவோ, ஒரு நிபுணரை அணுகவோ தயங்குகிறார்கள். ஜெம் மருத்துவமனை ஒரு நோயாளி மற்றும் மருத்துவர் உறவுக்கு இடையே உள்ள இடைவெளியை குறைக்க விரும்புகிறது. எனவே **'கருத்தரிப்பு மருத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த மகளிர் மையத்தை**' திறந்துள்ளது. எங்கள் அனைத்து மகளிர் மருத்துவ குழுவும் தங்கள் நோயாளிகளுக்கு தனிப்பயனாக்கப்பட்ட கவனிப்பை வழங்கி தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். பெண்கள் எதிர்கொள்ளும் சுகாதார பிரச்சினைகள் மற்றும் சரியான நேரத்தில் சிகிச்சை பெற வேண்டிய அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும்'' என்றார்.

இந்த அறிமுகம் குறித்து **சென்னை ஜெம் மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர் பி.செந்தில்நாதன் பேசுகையில்**, "இந்த முயற்சி மனித குலத்திற்கான ஜெம் மருத்துவமனையின் நீண்டகால வரலாற்றில் ஒரு முக்கியமான படியாகும். எங்கள் அனுபவம் வாய்ந்த மகளிர் மருத்துவர்கள் குழுவில் **டாக்டர் ஆர். கார்த்திகா** - மகப்பேறு மருத்துவத் துறை, **டாக்டர் நிவேதிதா** மற்றும் **டாக்டர் ருக்காயல் பாத்திமா** - கருத்தரிப்பு மருத்துவத் துறை, **டாக்டர். உத்ரா குமரேசன்** - உள் மருத்துவம் மற்றும் நீரிழிவு துறை, **டாக்டர் மோனிகா.எஸ்** – அறுவை சிகிச்சைத்துறை – மார்பு மற்றும் ஹெர்னியா கிளினிக், **டாக்டர். வான்மதி -** வலி மருத்துவம் மற்றும் மயக்கவியல் துறை, மற்றும் பலர் அடங்குவர்'' என தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், ''எங்கள் புதிய விரிவான மையம் வாழ்க்கை முறை மாற்றங்களால் ஏற்படும் பிரச்சனைகள் முதல் பெண்களின் உயிருக்கு ஆபத்தான அனைத்து நோய்களுக்குமான ஒரே தீர்வாக இருக்கும். இந்த துவக்கத்தின் ஒரு பகுதியாக, நாங்கள் ஒரு மாதத்திற்கு அனைத்து நோயாளிகளுக்கும் இலவச கருவுறுதல் ஆலோசனை மற்றும் இலவச ஸ்கேன் வசதியை வழங்குகிறோம்'' என்றார்.

*"6 ஜோடிகளில் ஒருவருக்கு கருவுறுதல் பிரச்சினைகள் உள்ளன. அவர்களுக்கு மருத்துவ ஆலோசனை தேவைப்படும். மாற்றப்பட்ட வாழ்க்கை முறை மாற்றங்கள், உடல் பருமன், தாமதமான கருத்தரித்தல் வயது, எண்டோமெட்ரியோசிஸ் மற்றும் ஃபைப்ராய்டுகள் என பல காரணங்கள் அடங்கும். சில சந்தர்ப்பங்களில், கருவுறுதல் முடிவுகள் கருவுறுதலை மேம்படுத்தும் எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சையைப் பொறுத்தது. ஜெம் மருத்துவமனையில் 17 ஆண்டுகளாக பெண்களுக்கான பிரத்யேக துறை உள்ளது. இது இளமைப் பருவம் முதல் மாதவிடாய் நின்ற காலம் வரையிலான பெண்கள் சம்பந்தமான பிரச்சினைகளைக் கையாளும் மற்றும் குறைந்தபட்ச ஆக்கிரமிப்பு அறுவை சிகிச்சைகளை (லேப்ரோஸ்கோபிக், ஹிஸ்டெரோஸ்கோபிக் மற்றும் ரோபோடிக்) வழங்கி வருகிறது. நவீன சிகிச்சை மற்றும் விரிவான அணுகுமுறையுடன், இந்த தம்பதிகளுக்கு உதவவும் அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதாகவும் நாங்கள் சபதம் செய்கிறோம்" என்றார்* ***டாக்டர். ஆர்.கார்த்திகா, தலைவர் - கருத்தறித்தல் துறை, ஜெம் மருத்துவமனை.***

*For information contact:* ***9841822433 or info@geminstitute.in***